**சைவத்தமிழ் கலாச்சார ஆய்வுமையம்**

**CVR Nr: 34661421**

**விசேட பொதுக்கூட்ட அறிக்கை 26-01-25**

**கூட்டம் ஆரம்பம்  15.00**

**இடம்:   ஆலய திருமணமண்டபம்**

சமூகமளித்தவர்கள் 51 பேர்

வேல்முருகன் ஆலயத்தின் விசேஷ பொதுச்சபை கூட்டம் முதலில் ஆலய நிர்வாகத்தின் தலைவர் திரு .லக்சுமி காந்தன் அவர்களின் வரவேற்புடன் சரியாக 15 .00 மணியளவில் கூட்டம் ஆரம்பமானது

இந்த கூட்டத்தை நடாத்துவதற்கு அவைத்தலைவர் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற முன்மொழிவுடன். அறங்காவலர் சபையின் அனுசரணையுடன் கூட்டம் நடத்துவது நல்லது என்ற பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் திரு . ஸ்ரீரங்கன் அவர்கள் அவைத்தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

அறிக்கை எழுத்துவதற்கு. திரு. சிவகுருநாதன் அவர்களும் டெனிஸ் மொழியில் எழுத்துவதற்கு திருமதி . சுதர்ணி கிருஷ்ணமேனன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்

அவைத்தலைவரின் கூற்றுப்படி இன்றைய கூட்டம் நடாத்துவதற்கு தேவையான அங்கத்தவர்கள் சமூகமளித்துள்ளார்களா என ஆராயப்பட்டது

இன்றய கூட்டம் நடத்துவதற்கு போதுமான அங்கத்தவர்கள் சமூகமளிக்கவில்லை என்பதால் ஆலயத்தின் மொத்த அங்கத்தவர்கள். 139 பேர். இன்றைய கூட்டம் நடத்துவதற்கு 69 பேர் சமூகமளித்திருக்கவேண்டும் ஆனால் சமூகமளித்தவர்களின் எண்ணிக்கை 51 பேர் மட்டுமே. 18 அங்கத்தவர்கள் போதாக்குறையாக இருப்பதால் இந்த கூட்டம் நடத்துவதா ? இல்லையா ? என்பதை பொதுச்சபைல் ஆராயப்பட்டது

பொதுசபைன் தீர்மானப்படி இங்கு வந்தவர்களைக் கொண்டு கூட்டத்தை நடாத்துவதெனவும் சில முடிவுகளையும் எடுப்பது நல்லதெனவும் 31 .01 2025 ம் திகதி வரைக்கும் பணம் கட்டிய அங்கத்தவர்களை கொண்டு தீர்மானிக்கலாம் எனவும் முடிவுசெய்யப்பட்ட்து.

பொதுசபைன் தீர்மானப்படி இந்த கூட்டம் தொடர்ந்து நடத்தலாம் என்றதற்கு அமைய அவைத்தலைவர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு முக்கியமாக கீழ்காணும் விடையங்கள் ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த விசேஷ கூட்டத்தில் ஆராயப்பட இருக்கும் முக்கிய விடயங்கள்

1. எம்மவர்களின் நன்மை கருதி ஆலய அங்கத்தவர்களை அதிகப்படுத்த வேண்டும்

2. பழைய நிர்வாகத்திடம் இருந்து சரியான முறையில் ஆவணங்கள் புதிய நிர்வாகத்திடம் ஒபபடைக்க படாத காரணத்தால் முக்கிய ஆவணங்கள் புதிய நிர்வாகத்திடம் ஒப்படைப்பது சம்பந்தமாகவும்
3. வேல்முருகன் ஆலயத்தின் 2025 ஆண்டுக்கான அண்ணளவாக மதிப்பீடு செய்யப்படும் வரவுசெலவுகள் புள்ளிவிபரம் (2023 , 2024 ஆண்டு கணக்குகளின் அடிப்படையில் ஆராயப்பட்டு. மதிப்பீட்டு செய்யப்பட்ட கணக்குகள் புள்ளிவிபரமாகும் )
4. வேல்முருகன் ஆலயத்தின் பூசை முறைகள் சம்பந்தமாக

1. அங்கத்தவர்கள் சம்பந்தமாக

அங்கத்தவர்கள் சம்பந்தமாக 2025 ம் ஆண்டுக்கான அங்கத்துவபப்பணம் கட்டடியவர்களை அங்கீகரிப்பதெனவும் சபையில் தீர்மானிக்கபபட்டது.

அங்கத்தவர்கள் தொகைசம்பந்தமாக 200 அங்கத்தவர்கள் என பேசப்பட்டாலும் தற்போழுது இருக்கும் தொகையுடன் தேவைப்படும் பட்சத்தில் கூட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அங்கத்தவர்கள் சம்பந்தமாக அறங்காவலர்சபையினர் நன்கு ஆராய்ந்து ஆவணப்படுத்தும் வேலைகளை முன்னெடுப்பதாகவும் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது

2 . ஆவணங்கள் சம்பந்தமாக

அடுத்தபடியாக ஆவணங்கள் சம்பந்தமாக அவைத்தலைவர் அவர்களால் விளக்கமழிக்கப்பட்டது புதிய நிர்வாகத்தினரிடம் பழைய நிர்வாகத்தினர் 09.01 .2025 வியாழக்கிழமை ஒப்படைத்த ஆவணங்கள்

- திறப்புகள் கையளிக்கப்பட்டது
- E - Boks ஒப்படைக்கப்பட்டது
- உண்டியல் பணம் 52.866 kr கொடுக்கப்பட்டது
- மொத்த நகைகளும் அதன் இடை 165 g இதில் கல் உள்ளநகைகளும் உள்ளது இதில் இரண்டு செயின்கள் கருப்படித்துள்ளதாகவும் இவை எல்லாமாக புதிய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது
- 2024 ஆண்டு கணக்குகள் இன்னும் பழைய நிர்வாகத்தின் பொறுப்பில் உள்ளது
- 20 .12 .2024 செவ்வாய் கிழமை வேல்முருகன் ஆலயம் kirke ministry ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது அதனால் 2024 ம் ஆண்டு கணக்குகள் சரியானமுறைல் அனுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.
- காணி சம்பந்தமாக அரங்காலர் சபையினரால் காணி சொந்தகாரனுடன் கதைக்கப்பட்டுள்ளது எனவும் அதன் முடிவுகள் எட்டப்படவில்லை என்பதால் தொடர்ந்து பேசுகின்றோம் எனவும் இதன் முடிவுகளை பின்னர் அறிவிப்பதாயும் தெரிவித்தார்
- பழைய நிர்வாகத்தால் விடுபட்ட கடன் நிலுவைகள் மொத்தமாக 131.317,91 kr இருந்ததாகவும் அதனை அறங்காவலர் சபையால் கட்டப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். இதில் முக்கியமாக skat சம்பந்தமாக கட்டவேண்டிய பணம் 58.071,94 kr கட்டியுள்ளோம் அதில் 6.000 kr திரும்பி வந்ததெனவும் 7000 kr திரும்பவும் கட்டவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது .

- 2023 ம் ஆண்டு மற்றும் 2024 ம் ஆண்டுக்கான கணக்குகள் சம்பந்தமாக எந்த ஆவணங்களும் ஒப்படைக்கபபடவில்லை.

இதில் முக்கியமானவிடையம் என்னவென்றால் 2023 ம் ஆண்டுக்கான ஒட்டுமொத்தமாக பற்றுச்சித்திடுகள் அடங்களாகவுள்ள பயில் 19.01.2025 புதன்கிழமை காணாமல் போய் விட்ட்து என பழைய பொருளாளர் தெரிவித்ததாக அவைத்தலைவர் தெரிவித்தார்.

இந்த விடயமாக பழைய பொருளாளர் திரு.பாவானந்தன் பேசும்போது என்னுடைய பொறுப்பிலிருந்த காலத்தில் தான் 2023 ம் ஆண்டுக்கான பைல் காணாமல் போயுள்ளது அதற்கு தான்தான் பொறுப்பு கூறவேண்டும் என்ற ரீதியில் இந்தவிடையமாக நிர்வாக தலைவரிடமும் அறங்காவலர் சபை தலைவரிடமும் பேசியதாகவும் தெரிவித்தார்

இந்தவிடையமாக சபையில் பலத்த வாத பிரதிவாதங்கள் ஏட்பாடாலும் இந்தக்கணக்கு சென்ற பொதுக்கூட்டங்களில் பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட கணக்குகள் அதனால் யாரும் களவாடவேண்டிய அவசியவில்லை என்பதே சபையோரின் நிலைப்பாடாக காணப்பட்டது

இந்தவிடையதில் அறங்காவலர் சபையின் பணி மிகவும் முக்கியம் அவர்கள் ஆலயத்தின் பல விடையங்களை சுமூகமான நிலைமைக்கு கொண்டுவந்துள்ளார்கள்

இதில் முக்கியமானவிடையம் பழைய நிர்வாகத்தால் லோயர் மூலமாகத்தான் ஆவணங்கள் ஒப்படைக்கப்படும் என்ற நிலைப்பாடடில் இருந்தது அதனை பழைய , புதிய நிர்வாகத்துடன் பலநாட்கள் கூட்டங்கள் வைத்து பல வாத பிரதிவாதங்கள் எதிகொண்டு ஆவணங்களை ஒப்படைக்க உதவியது மட்டுமின்றி எந்தபாகுபாடும் இல்லாமல் பொதுச்சபையில் பல விடையங்களை ஒளிவு மறைவு இல்லாமல் தெரியப்படுத்தியது

மற்றும் ஒரு முக்கியமான விடையம் சென்ற 02 .01 .2025 செவ்வாய் கிழமை திரு.பவானந்தன் அவர்கள் ஆலயத்துக்கு சொந்தமான hadisk ஒன்றை எடுத்து சென்றதாகவும் செல்லும் வழியில் தலைவர் திரு.காந்தன் அவர்களுக்கு டெலிபோனில் சொன்னதாகவும் அதனை 04 .01 .2025 வியாழக்கிழமை திரும்பவும் கொண்டுவந்து ஒப்படைக்கபட்டதாகவும் சபையில் தெருவிக்கப்பட்டது

இந்த hadisk சம்பந்தமாக திரு.பாவனந்தன் பேசும்போது நான் எடுத்துச்சென்றது உண்மை அதனை தலைவரிடம் சொல்லிவிட்டுத்தான் கொண்டுசென்றேன் எனத்தெரிவித்தார்

இதற்கு திரு.காந்தன் விளக்கமளிக்கும்போது அன்று பவான் ஹார்டிஸ்க் எடுத்து செல்லும்போது ஆலயத்தில் ஆலயசெயலாளர் மற்றும் நிர்வாக அங்கத்தவர்கள் பலர் ஆலயத்தில் இருந்தார்கள் ஏன் அவர்களிடம் இதைப்பற்றி பவான் தெரியப்படுத்தவில்லை அவர் வீட்டிற்கு செல்லும் வழியில் எனக்கு டெலிபோன் அடித்து சொல்லி என்னபயன்.

இதன் எதிரொலியாக பலதரப்பட்ட வாதங்கள் இடம்பெற்றது

இவர் ஒரு நிர்வாக உறுப்பினர் இல்லை இவருக்கு எந்த அதிகாரமும் இல்லை அப்படி இருக்கும் ஒருவர் புதிய நிர்வாகத்தின் அனுமதி இல்லாமல் ஹார்டிஸ்க்கை தனிப்பட்ட முறையில் எப்படி எடுத்துச்செல்வார் அப்படி அவர் எடுத்து சென்றிருந்தால் அது களவாக கருதப்படும் எனவே ஆலய நிர்வாகத்தினர் போலீசுக்கு அறிவிக்கும் படியும் இவருக்கு குறிய சட்டநடவடிக்கை எடுக்கும்படியும் தெரிவித்தார்

மற்றும் இந்த ஹார்டிஸ்க்கில் உள்ள வீடியோ ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ள நிலையில் பவான் வேண்டுமென்றே இதனை எடுத்து சென்று தனக்கு தேவையான வீடியோ கோப்புக்களை அழித்துவிட்டு திரும்பவும் கொண்டுவந்து ஒப்படைத்துள்ளார்

இதற்கு விளக்கமளித்த பவாநந்தனவர்கள் தான் ஹார்டிஸ்க் எடுத்து சென்றதை ஏற்றுக்கொள்கிறேன் நீங்கள் போலீசில் முறைப்பாடு செய்யும்படியும் போலீசை சந்தித்து விளக்கமளிக்க தான் தயார் எனவும் தெரிவித்தார்

3. வேல்முருகன் ஆலயத்தின் 2025 ஆண்டுக்கான அண்ணளவாக மதிப்பீடு

31 .12 .2024 ல் வேல்முருகன் ஆலயத்தின் வங்கியில் இருப்பு 728.871 kr
காப்புறுதியால் கிடைத்தனம் 314.629 kr
சாமான்கள் எறிந்தவகையில் காப்புறுதில் கிடைத்த பணம் 87.000 kr
மிகுதி 245.236 kr

மேலும் அறங்காவலர் சபையால் 2025 ம் ஆண்டுக்கான அண்ணளவான வரவுசெலவுகள் சம்பந்தமாக ஆராயப்பட்டு அதன் புள்ளிவிபர கோப்பு தயாரிக்கப்பட்டுள்ளது அதன்படி கணக்கீடு தரவுகளின் அடிப்படையில் எமது ஆலயத்துக்கு ஒரு நாளைக்கு 1.381 kr செலவாகும் என கணிப்பிட்டுள்ளார்கள்

ஒருநாளைக்கு 1.381 kr என்பது எமது ஆலயத்தை பொறுத்தவரை பெரிய தொகையாகும் . இதற்கு ஈடுகொடுக்கும் முகமாக அறங்காவலர் சபையினரால் சிலவிடையங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது

- முதலில் அங்கத்தவர்களை அதிகப்படுத்துதல்
- எல்லோரும் ஒற்றுமையாக உபயபூசைகள் செய்வது
- பக்தர்களின் நன்கொடையை ஊக்குவித்தல்
- கலைவிழா போன்ற நிகழ்வுகளை முன்னெடுத்தல்
- ஆலயத்தில் கல்யாண நிகழ்வுகளுக்கு முன்னுரிமை கொடுப்பது
- சமையல் சாப்பாடு செய்துகொடுத்தல் போன்ற விடயங்கள் முன்னெடுத்து

எல்லோரும் ஒற்றுமையாக செயல்பட்டால் எமது ஆலயத்தை முன்னெடுத்து செல்லமுடியும் என பரிந்துரை செய்துள்ளார்கள்

4. ஆலயத்தின் பூசை முறைகள்

ஆலய நிர்வாகத்தின் தலைவர் திரு .லக்சுமி காந்தன் பூசை முறைகளை பற்றி பேசும்போது தான் அறிந்த வகையில் தற்பொழுதுள்ள பூசை முறையில் மாற்றம் கொண்டுவரவேண்டும் மேலும் எல்லோரையும் இணைத்து ஆலயத்தை நடத்துவதாக இருந்தால் தான் ஒரு யோசனையை முன்வைப்பதாகவும் அது என்னவென்றால் ஆலயத்தில் உபயபூசை செய்யும் ஒருவர் தனக்கு எந்தமொழியில்

பூசை செய்ய விருப்பமோ அந்தமொழியில் பூசை செய்வது அவர் தமிழில் பூசைசெய்ய விரும்பினால் தமிழில் செய்வது சமஸ்கிரத்தில் செய்யவிரும்பினால் சமஸ்கிரத்தில் செய்வது அதற்கு எல்லோரின் ஒத்துழைப்பும் அவசியம் தேவை என்பதையும் சுட்டிகாட்டடினார்

இதற்கும் பல வாத பிரதி வாதங்கள் ஏற்பட்ட நிலையில்

இதனை தொடர்ந்து திரு . பவானந்தன் அவர்கள் பேசும்போது தமிழில் பூசை முறையை மாற்றினாலும் அதனை தொடர்ந்து செய்யமுடியாத நிலைமையே எங்களுடைய கோவிலுக்கு தமிழ் பூசை சரிவராது என்றும் சமஸ்கிரத்தில் பூசை வைப்பது நல்லதென்றும் தெரிவித்தார் .

தமிழில் பூசை செய்வதில் பலபிரச்சனைகள் ஏற்பட முக்கிய காரணத்தை ஆராயமுறப்படும்போது எங்கள் ஆலயத்துக்கு சரியான பூசை முறைகளை கொண்டு தமிழில் பூசைசெய்வதற்கு கற்றறிந்த பூசாரியோ அல்லது சைவக்குருக்களோ எங்களுக்கு சரியானவர்கள் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

இன்றைய நிலைப்பாடடில் இங்கு வந்திருக்கும் 90 சத விதமானவர்கள் சமஸ்கிருதத்தை விரும்புகிறார்கள் ஏன்? செந்தமிழில் பூசை வேண்டும் என்றவர்களும் இன்று பிராமணர்களை கொண்டு சமஸ்கிரத்தில் பூசை வைக்கும்படி சொல்கின்றார்கள் இது பொதுச்சபைன் அங்கீகாரம் இதற்கு ஆலய நிர்வாகத்தின் முடிவு என்ன என்பதை அறிய ஒருசில நிமிடத்தின் பின்னர் நிர்வாகத்தின் முடிவு அறிவிக்கப்பட்டது

வேல்முருகன் ஆலய நிர்வாகத்தின் முடிவு சமஸ்கிரத்தில் பூசை செய்வதாகவும் அதனை எதிர்வரும் 11.02.2025 செவ்வாய் கிழமை தை பூச நன்னாளில் ஆரம்பிப்பதெனவும் அறிவித்தார்கள்

திரு. மகேசன் அவர்கள் பேசும்போது எதை செய்தாலும் சரியாக செய்யுங்கள் சட்டப்படி செய்யுங்கள் என்றநிலையில் பலரும் அதை ஆமோதித்தார்கள் எனவே 14 நாட்களின் பின்னர் இதற்கென்றுமட்டும் ஒரு பொதுசபையை கூட்டி தீர்மானத்தை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது

இந்தநிலையில் அந்த கூட்டத்திற்கு தங்களால் வரமுடியாது என்றவர்களின் வேண்டுதலை பொதுச்சபை ஏற்றுக்கொண்டு ஆலய நிர்வாகம் ஆலயத்தில் சமஸ்கிரத்தில் தான் பூசை செய்வதாக எடுத்த முடிவுக்கு நாங்களும் சம்மதிப்பதாக தங்களின் கையொப்பத்தை வைத்து உறுதிசெய்தார்கள் இந்த ஆவனபடிவம் அடுத்துவரும் பொதுச்சபை கூட்டத்திற்கு பாவிப்பதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது

இந்த கூட்டத்திற்கு சமூகமளித்த அணைவருக்கும் நன்றி

**மேன்மை கோள் சைவநீதி விளங்குக உலகமெலாம்**

**அவைத்தலைவர்** **எழுதினர்**
**சிறிரங்கன்.** **சிவகுருநாதன்**